**செய்தி வெளியீடு எண்:210** **நாள்:04.04.2021**

## பத்திரிக்கைச் செய்தி

தேர்தல்களை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துவதே, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் நோக்கமாகும். தேர்தல் செலவினக் கண்பாணிப்பின் வாயிலாக எல்லா வகையிலும் தூண்டுதலை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கு பறக்கும் படை (FST), நிலையான கண்காணிப்புக் குழு(SST), வீடியோ கண்காணிப்புக் குழு(VST), மாவட்ட அளவிலான பொறுப்பிலுள்ள அதிகாரிகள் மற்றும் மாவட்ட அளவிலான கட்டுப்பாட்டு அறைகள் போன்றவை நிறுவப்பட்டுள்ளன.

தேர்தல் செலவின முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் 105 தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, மேலும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அத்தொகுதிகளை கூடுதல் முயற்சிகளுடன் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் செலவின முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன மற்றும் கடந்த 72 மணி நேரத்தில் தூண்டல் செயல்களை சரிபார்த்திட குழுக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

மாநில அளவில் 4 மாநில ஒருங்கிணைப்பு அதிகாரிகள் - அதில் 2 தேர்தல் செலவினப் பார்வையாளர்கள், 1 காவல்துறை தேர்தல் பார்வையாளர் மற்றும் 1 பொதுவான தேர்தல் பார்வையாளர் உட்பட நியமனம் செய்யப்பட்டு தேர்தல் செலவினங்கள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதிசெய்யும் பொருட்டு 118 செலவினப் பார்வையாளர்கள், இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டு வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியோரின் செலவினங்களை கண்காணிக்கப்படுகிறது.

நாளதுவரை ரூ.428.46 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் பரிசு பொருட்கள்பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதில் ரொக்கமாக மட்டும் ரூ.225.50 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ரூ.176.11 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளி, வைரம் மற்றும் பிற மதிப்புமிக்க ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ரூ.4.61 கோடி மதிப்பிலான 2,75,293.31 லிட்டர் மதுபானங்கள் மற்றும் ரூ.20.01 கோடி மதிப்புள்ள பிற பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மத்திய ஆயுதக்காவல் படை குழுவினருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் தேர்தல் செலவினக் கண்காணிப்பைப் பொருத்தவரை கடைசி 72 மணி நேரக் கண்காணிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தேர்தல் செலவினக் குழுக்களுடன் இரவு நேர மற்றும் அதிகாலையில் ரோந்துப் பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அதன் விளைவாக கடந்த 24 மணி நேரத்தில் குறிப்பிடத்தக்க அளவு பறிமுதல்கள் செய்யப்பட்டுள்ளன. அதாவது இராணிப்பேட்டை மாவட்டத்தில் ரூ.91.56 இலட்சம், சென்னை, ஆயிரம் விளக்கு தொகுதியில் ரூ.1.23 கோடி, சேலம், வீரபாண்டியில் ரூ.1.15 கோடி, வேலூர் மாவட்டத்தில் ரூ.1.06 கோடி, கோயம்புத்தூர் நகரில் ரூ,98 இலட்சம், சைதாப்பேட்டையில் ரூ.1.13 கோடி, விருதுநகர் தொகுதியில் ரூ.65 இலட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ரொக்கம் மற்றும் மதுபானம் ஆகிய அனைத்தும் சேர்த்து கடந்த 24 மணி நேரத்தில் ரூ.8.42 கோடி ரொக்கமும் மற்றும் 4190 எண்ணிக்கையிலான மதுபான பாட்டில்கள் மற்றும் 7600 லிட்டர் போலி மதுபாணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான அனைத்து புகார்களையும் தெரிவிக்க பொதுமக்கள் 1950 என்ற தொலைபேசி எண்ணில் மாவட்ட அளவிலான தேர்தல் நடத்தும்

அலுவலர்களையும், மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தைத் தொடர்புகொள்ள 1800 4252 1950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணிலும் தெரிவிக்கலாம். தேர்தல் தொடர்பாக ஏதேனும் தவறான செய்கையில் அல்லது விதிமீறலில் யாரேனும் ஈடுபட்டால் cVIGIL என்ற அலைபேசி செயலியின் வாயிலாக தேர்தல் ஆணையத்திற்கு புகாரளிக்கலாம். புகார்தாரர்கள் பற்றிய விவரங்கள் இரகசியமாக வைக்கப்படும். எனவே, பொதுமக்கள் மேற்கண்ட கட்டணமில்லா தொலைபேசி மற்றும் cVIGIL என்ற அலைபேசி செயலியைப் பயன்படுத்தி தேர்தல் விதிமீறல் மற்றும் தவறான நடவடிக்கையில் ஈடுபடுவோர் பற்றி தேர்தல் ஆணையத்திற்குப் புகாரளிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். அனைத்து புகார்கள் பெறப்பட்டவுடன் தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக்குழு ஆகியவற்றை உடனடியாக நிகழ்விடத்திற்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**